IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சங்க இலக்கியத்தில் தமிழர் பண்பாட்டு அறம்

**முனைவர் நா .அனிதா (Dr. N. ANITHA)**
**உதவிப்பேராசிரியர்**
**தமிழ்த்துறை**
**அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்**
**எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்**
**(நிகர்நிலைப்பல்கலைக்கழகம்)**
**திருச்சிராப்பள்ளி – 621105**

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க கால தமிழர் களவு, கற்பு, போர், வீரம், கொடை, விருந்தோம்பல் இவற்றை பண்பாடகக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். இப்பண்பாட்டுக் கூறுகள் ஒவ்வொன்றிலும் 'அறம்' கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. சங்க தமிழன் வாழ்வியலில் இரண்டற கலந்துள்ள 'அறம்' பற்றிய பதிவுகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும். அறம் எது? அறனில்லாமை எது? என பகுத்து, அறத்தினை வலியுறுத்தி அதனை அக வாழ்விலும், புறவாழ்விலும் பின்பற்றி வந்தமை காண முடிகிறது. அவ்வகையிலேயே இவ்வாய்வும் அமைகின்றது.

**முக்கிய வார்த்தைகள்**

அறம் பொருளின்பம், அறவிலை வணிகன், அறவர் வாழி, அறனில் அன்னை, அறனிலாளன்.

## முன்னுரை

தமிழர் தம் வாழ்வியலை அகம், புறம் என இரண்டாகப்பகுப்பர். தமிழர் வாழ்வியலின் நோக்கமாக அறம், பொருள், இன்பம் என்று கொண்டனர் . 'அன்பே அறனே இன்பம்' (தொல், பொருள்:213) என்கிறது தொல்காப்பியம். சங்க கால அகப்புற வாழ்வியலில் அறம் நிலைப்பெற்றிருந்தது. அறத்தைப் பின்பற்றிய சங்க காலம் பொற்காலம் எனப் போற்றப்படுகிறது. அச்சங்க காலத்தில் அறம் அகவாழ்விலும், புறவாழ்விலும் பெற்றுள்ள இடத்தினை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## அறம்

அறம் என்ற சொல்லுக்கு அகராதிகள் பல பொருளைத் தருகின்றன. அவை, அறக்கடவுள், அறச்சாலை, அறநூல், இல்வாழ்க்கை, இன்சொல், ஒழுக்கம், கடமை, கற்பு, சமயம், ஞானம், தகுதி, தர்மம், நீர்மை, நூற்பயன் நான்கினொன்று, நோன்பு, புண்ணியம், புனிதம், பெரியோரியல்பினொன்று, யமன், வசைகவி என்பனவாகும். இச்சொற்கள் தமிழர் வாழ்வில் பல நிலைகளில் அறத்திற்கு தனியிடம் இருப்பதைக் காட்டுகிறது.

## சங்க இலக்கியத்தில் அறம்

காடுதிருத்திக் கழனி அமைத்து வாழ்ந்தவன் தமிழன். வாழ்வினை காதல், வீரம் என்ற இருபெரும் பகுப்பிற்குள் அடக்கி வெளிப்படுத்துகிறது சங்க இலக்கியம். அகப்பொருள் பற்றி சங்க இலக்கியத்தில் பேசும் பொழுது பெண்ணிற்கு சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. புறமாகக் கருதப்பட்ட வீர வாழ்வில் பெரும் பங்கினை ஆண் பெற்றிருந்தான். ஆதலால் சங்க இலக்கியத்தில் புறப்பொருள் பற்றிய இடங்களில் ஆணின் வீரத்திற்குப் பேரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த இரு பெரும் பகுப்புகளில் இரண்டற அறம் பேணப்பட்டது. ‘அறம் பொருளின்பம்’ (புறம்: 28,31) என்று அறம் முதலிடம் பெற்றது. அறம் நிலைக்கும்போது பொருளும் அதனாலாய இன்பம் கிட்டும் என்ற நோக்கில் வகுக்கப்பட்டது. இலக்கியத்தில் ‘அறங்கடைப்படாஅ’ (அகம்:155), ‘அறந்துறையம்பி’ (புறம்:381), ‘அறஞ்செய்தீமோ’ (புறம் 145), ‘அறநிலை திரியா அன்பின் அவையத்து’ (புறம்: 71), ‘அறமறக் கண்ட நெறிமா ணவையத்து’ (புறம்:224) என்று, பல இடங்களில் அறம் குறிக்கப்பட்டுள்ளது. அதனால் வாழ்வின் அனைத்திலும் நற்செயல் பேணியிருந்தமையை அறிய முடிகின்றது. அறம் பேணியதால் ‘அறவர் வாழி’ (நற்:86) என்று வாழ்த்தப்பட்டனர். வாணிகம் செய்வதில் நியாயமான விலையை வைத்துப் பொருளை விற்றதால் ‘அறவிலை வணிகன்’ (புறம்:134) என்று வழங்கப்பட்டான். இவ்வாறு மனித வாழ்வு பல வழிகளில் விரிவடைந்த போது அறம் என்ற சொல்லைத் தவிர அது உணர்த்தும் பல பொருள்களையும் பயன்படுத்திக் கொண்ட தமிழன் அனைத்திலும் அறம் பேணி வாழ்ந்தான்.

## தலைவி கூற்றில் அறம்

அறம் என்பது உயர்திணையிடத்து மட்டுமின்றி அஃறிணையிடத்தும் நற்பண்பு வெளிப்படும்போது அறம் அவற்றிற்கும் ஏற்றுப்பாடப்பட்டது. தலைவி தலைவனுடன் உடன் போக்கில் சென்றபோது சுற்றத்தார் தேடிச் சென்றனர். அவர்கள் அறியா வண்ணம் மலை இவர்களை மறைத்துக் கற்பினுக்குத் துணையாக அமைந்ததால்,

**அறஞ் சாலியரோ அறஞ்சாலியரோ**
**வறனுண்டாயினும் அறஞ்சாலியரோ**
**வாள்வனப்புற்று வருவிக்**
**கோள்வ லென்னையை மறைத்த குன்றே** **(ஐங் 312)**

என்ற பாடலில் குன்றம் அறம் உடையது என்று குறிப்பிட்டார் ஓதலாந்தையார்.

## தோழி கூற்றில் அறம்

சங்க அகப்பாடலில் மிகுதியானவை களவுப் பாடல்கள். அத்தகைய களவுப் பாடல்களில் தோழிகூற்று மிகுதியானது. தோழியே தலைவன், தலைவி இருவரும் ஊழினால் சந்தித்த பின்னர் தனது மதிநுட்ப உரையாடல் மூலம் இருவரையும் இல்வாழ்வில் இணைத்து வைப்பவள். ஆதலால் அவள் பேசுவதாக அமைந்த பாடல்கள் பேரிடம் பெற்றன. ‘அறம்’ என்று சுட்டப்படும் இடங்களிலெல்லாம் தோழி கூற்றுகளாகவே வெளிப்படுகின்றன. களவுக் காலத்தில் அலர் ஏற்படுவது இயற்கை. அதனை அறிந்த தாய் தலைவியை வெளியில் விடாது இற்செறிக்கின்றாள். அதனைக் கண்ட தோழி, ‘அறனில் அன்னை யருங்கடிப் படுப்ப’ (நற்:63), ‘தான்யாங் கென்னும் அறனில் அன்னை’(நற்:145), ‘அறன் இல் அன்னை’ (குறுந்:262) என்றும் பல இடங்களில் தாயின் செயலை இகழ்ந்து அச்செயலைச் செய்யும் தாய் அறமற்றவள் என்று கூறுகின்றாள். காரணம் சங்க காலத்தில் தலைவன் தலைவி இருவரும் ஒன்று பட்டு விட்டாலே கற்பாகக் கருதப்படுவதோடு ஊழ் வழியினால் சந்தித்த அவர்கள், நன்மைக்கருதி அவர்களைத் தாய் பிரித்தாலும் அச்செயல் அறமற்றதுதான் என்பதை புலவர் உலகம் ஏற்றதைத் தோழி கூற்று வாயிலாக வெளிப்படுகின்றன. தோழி என்பவள் தலைவியுடன் களவு வாழ்வில் இரண்டறக் கலந்து வாழ்பவள். அத்தகைய தலைவி விரும்பிய தலைவனிடமும், தாயிடம் குற்றம் கண்டால் அதனைக் களைந்து இவருவரையும் சேர்ப்பது தோழியின் அறப்பண்பு அதனை சங்கப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

## கூற்றில் வெளிப்படும் தலைவனின் அறம்

அகத்தில் விரும்பிய தலைவியை உரிய காலத்தில் கற்பினுக்கு அழைத்துச் செல்வது தலைவனுக்கு அறம். அவ்வாறு மணமுடிக்காமல் காலதாமதம் ஏற்படுத்தும் போது ‘அறனிலாளன்’ (நற்:275) என்று தலைவனின் காதுகளில் விழும்படி சிறைப்புறமாக நிற்கும்போது தோழி கூறுகின்றாள். களவு வாழ்வில் ஈடுபட்ட தலைவன், தலைவியின் இல்லத்தார்க்கு அறியாவண்ணம் தலைவியை உடன் கூட்டிச் செல்கின்றான். அதனை அறிந்ததாய் ‘அறினிலாளனோடிறத்தனன்’ (அகம்:219) என்று கூறுகின்றாள். இதனால் தலைவன் கற்பு வாழ்வில் ஈடுபடும்போது, ஊரறிய மணப்பதே அறம் என்று தாயும் வலியுறுத்துவதை இதன்வழி அறிய முடிகின்றது. இவ்வாறு, ஒரு பெண்ணின் நலன் நுகர்ந்தபின் அவளை அறியேன் என்று பொய்கூறியவனை ‘அறனிலாளன்’ என்கிறது அகநானூறு ,

**திரு நுதற் குறுமகள் அணி நலம் வவ்விய**
**அறனிலாளன், “அறியேன்” என்ற**
**திறன் இல் வெஞ் சூள் அறி கரி கடாஅய்,**
**முறி ஆர் பெருங் கிளை செறியப் பற்றி,**
**நீறு தலைப்பெய்த ஞான்றை,**
**வீறு சால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே (அகம்:256)**

என்ற பாடலில் இருந்து அறம் வலியுறுத்தப்பட்டதையும், அறமற்ற செயலைக் கண்டு தண்டிக்கப்பட்டதையும் அறிய முடிகின்றது. பிறகு, கற்பு வாழ்வில் இல்லறம் நடத்திக் கொண்டிருக்கும்போது தலைவன் பரத்தமை காரணமாகப் பிரிந்து பின் இல்லத்திற்கு வரும்போது வாயில் மறுத்த இடங்களில் அவன் செயலை வெறுத்து 'அறனிலாளன்' (அகம்:256) என்று கூறுப்பட்டுள்ளான். பரத்தமை சங்க காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கூறினாலும், அச்செயல் அறமற்றது என்பதை உணர்த்த 'அறனிலாளன்' என்ற சொல்லைக் கையாளுகின்றான் புலவன்.

## கற்பில் வெளிப்படும் அறம்

'அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்பர் பொய்யாமொழி புலவர். இவரும் சங்க இலக்கியத்தின் இல்லறக் கருத்துக்களை உட்கொண்டு கூறினார் போலும், அத்தகைய அறம் நிறைந்த இல்லத்தை ஆளுபவள் பெண் ஆதலால் அவள் 'இல்லாள்' எனப்பட்டாள். வீரத்தின் வித்தான ஆணையும் ஈன்று புறந்தந்து போரிலும் அறம் பேணும் தமிழனைத் தந்தவள் தமிழ்பெண் அத்தகைய இல்லாளின் தலையாய அறமே கற்பு. இதைச் சங்கப் பாடல்கள் சுட்டின. அரசனைப் பாடும்போது அரசமாதேவியும் பாடப்பட்டாள். காப்பியாற்றுக் காப்பியனார் களங்காய்கண்ணி நார்முடிச்சேரலைப் பாடும்போது அவன் மனைவியையும் பாடுவார். அவ்வாறு பாடும்போது 'அறஞ்சால் கற்புடையவள்'(பதிற்:4:24) என்று பாடுவார். அதற்கு உரையெழுதப் புகுந்த உரை வேந்தர் ஔவை.சு.துரைசாமிப் பிள்ளையவர்கள் 'இல்லறத்திற்கான அனைத்து அறமும் கற்றவள்' என்று விளக்கம் கூறுவர். இது போன்று 'அறங்காவற் பெண்டீர்' (பரி.தி.2:48)என்பதற்கு 'கற்புடை மகளிர்' என்று சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் கூறுகிறது. பெண் அனைத்து அறங்களையும் இயல்பாக நிறைவேற்றுவாள் என்பதால் கற்பு அறம் சிறப்பாகக் கூறப்பட்டது. ஆணுக்கும் கற்பு ஏற்புடைத்து என்பதால் பரத்தையருடன் தொடர்பு கொள்ளும் தலைவனைச் சுட்டும்போது வீரத்தில் தந்தையை ஒப்பாய், ஆனால் பரத்தையரோடு அவர் கொண்டுள்ள உறவுபோல் அமைந்து விடாதே எனக்கூறும் தலைவி 'அறனில்லா... தந்தை (கலி.86) என்கிறாள். இதனால் கற்பு, சமுதாயத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் பொது என்பதை இக்கருத்துப் பறை சாற்றுகின்றது .

## போரில் அறம்

சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்ற முப்பெரும் பகுப்புகளை உடையது தமிழ்நாடு, அவற்றில் குறுநில மன்னர்களும் வாழ்ந்தனர். வேந்தர்கள் தங்கள் நாடுகளை விரிவுபடுத்துங்கால் போர்கள் நடந்தன. வேந்தர்களுக்குள்ளும், குறுநில மன்னர்களோடும், குறுநில மன்னர்களுக்குள்ளும் போர்கள் நடந்தன. இவ்வாறு பகை மன்னர்களுடன் போர் நடக்கும்போது அந்நாட்டிலிருக்கும்,

**ஆவும் ஆநிரைப் பார்ப்பணமாக்களும்**

**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**

**தென்புல வாழ்நர்க் கருங்கட னிலுக்கும்**

**பொன்போற் புதல்வர் பெறா அ தீரும்**

**எம்மம்பு கடிவிடுதும் நும் மாண் சேர்மினென**

**அறத்தாறு நுவலும் பூட்கை (புறம்:9)**

என்ற அடிகள் பகை நாட்டுடன் போர் புரியும் போதும் அறத்துடன் போர் புரிந்ததைச் சுட்டுகின்றன.

## அறனும் - அரசனும்

'திருவுடை மன்னனைக் காணில் திருமாலைக் கண்டேனே' என்று வேந்தனை இறையெனக் கண்டான் தமிழன். குடி வாழ வேந்தன் செங்கோல் ஆட்சி செய்ய வேண்டும் அவ்வாறு அறமுடன் ஆட்சி செய்தானை 'அறம் புரி செங்கோன்' (ஐங்:290) என்று பாடினர். போரே வாழ்க்கையாகக் கொண்டாலும் அறம் நிலைக்கப் போர் செய்ததால் "அறப்போர்" (புறம்: 9,82) என்று இலக்கியம் சுட்டிற்று.

ஒருமுறை பெருங்குன்றூர்க் கிழார் பெருஞ்சேரலிரும் பொறையிடம் பரிசில் பெறச் செல்கின்றார். அப்போது பரிசில் பெறக் காலம் நீடிக்கவே,

**மன்பதை காக்குநின் புரைமை நோக்காது**

**அன்புகண் மாறிய வறனில் காட்சியொடு**

**நும்ம னோருமற் றினைய ராயின்**

**எம்மனோரிவட் பிறவலர் மாதோ...... (புறம்: 210)**

என்று 'அறனில் காட்சி' என்று அவன் செயலைச் சுட்டிக்காட்டிப் பரிசில் வேண்டுகிறார். மன்னனுக்குச் சிறப்பு கொடையறம் என்பதால் அதைச் செய்யும்படிப் பணிக்கின்றார். அதற்கு உரை வகுத்த ஔவை.சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் ''நும்மனோர் பால் அஃது இல்லாயின் எம்மைப் போல்வார் பிறவார்" என்று உரை வகுப்பர். இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி புலவர் கேட்ட அளவிலேயே பரிசில் கொடுத்தவன் ஆதலால்,

**அவியுணவினோர் புறங்காப்ப**

**அறநெஞ்சத்தோன் வாழநாளொன்று**

**அதற்ககொண்டு வரலேத்திக்**

**கரவில்லாக் கவிவண்கையான்**

**வாழ்கவெனப் பெயர் பெற்றோர்**

**பிறர்க்குவமந் தானல்லது**

**தனக்குவமம் பிறரில்லென**

**அது நினைத்து மதிமழுகி...... (புறம்:377)**

என்று சோழனை ‘அறநெஞ்சத்தோன்’ என்று பாடுகிறார் உல்லோச்சனார். அரசன் செய்யும் போரில் அறம் பேனப்பட்டதை,

**பருந்தருந் துற்ற தானையொடு செருமுனிந்**

**தறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர் .....** **(புறம்:62)**

என்று பாடுவதன் மூலம் அறியமுடிகின்றது.

## அறச்சாலை

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் வஞ்சினம் கூறும் போது,

**அறநிலை திரியா வன்பின வையத்துத்**

**திறனிலொருவனை நாட்டி முறை திரிந்து**

**மெலிகோல் செய்தேனாகுக.....** **(புறம்:71)**

என்ற அடிகள் வாயிலாக அறம் கூறும் ‘சான்றோர் அவையம்’ இருந்ததை அறிய முடிகின்றது. இவ்வாறு புற வாழ்வில் மையக் கருவான அரசன் அறப்பண்புடன் திகழ வேண்டும் என்பதைச் சங்க இலக்கியம் வலியுறுத்தக் காரணம் குடிமக்களும் அறம் நிலைக்க வாழவேண்டும் என்பதேயாகும். ஆதலால் தான் ‘அரசன் எவ்வழியோ மக்கள் அவ்வழி’ என்றனர்.

## சமுதாய அறம்

பண்டை வாழ்வில் தலைவனுடன் தலைவி இல்லற வாழ்வில் இணைந்து வாழ்வதைப் போல, இறந்த உடனும் இணைய எண்ணினர் துணைவியர்.இது அக்கால வாழ்வியலில் அறம் எனப்பட்டது. எனவே பூதபாண்டியன் தேவியாகிய பெருங்கோப் பெண்டு கணவனான பாண்டியன் எரிக்கப்பட்டபோது தானும் உடன் மாயத்துணிந்தாள். அப்போது சான்றோர் அவளைத் தடுத்தனர். அதற்கு அவள்,

**பல்சான்றீரே பல் சான்றீரே**

**செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்**

**பொல்லாச் சூழ்ச்சிப் பல் சான்றீரே** **(புறம்:246)**

என்ற பாடலில் கணவனை நீங்கி வாழ்வது அறமற்ற செயல் அத்தகைய செயலை அறம் சான்ற பெரியோர் தடுத்துக் கூறுவதால் அவர்களைப் பார்த்துப் ‘பொல்லாச் சூழ்ச்சிப் பல் சான்றீர்’’ என்று கூறுகின்றாள்.எனினும் சான்றோர் செயல் அக்கால வாழ்வியலில் மாற்றம் உருவாக்கும் முயற்சியாகத் தோன்றுகிறது. இதனை ஒரு நல்சமுதாய அறமாகப் போற்றலாம் .

## முடிவுரை

சங்க வாழ்வில் களவிலும், கற்பிலும் அறம் பேணப்பட்டதை ‘அறத்தோடு நிற்றல்’ எனத்துறை வகுப்பதை கொண்டு அறிய முடிகிறது. களவில் சந்திக்கும் தலைவன், தலைவி இல்லற வாழ்வில் இணைவது பேணப்பட்டது. அதற்கு தாய் தடுப்பினும் அறமற்றவளாகக் கருதப்பட்டாள். அவ்வாறு இணைந்த இல்வாழ்வில் தலைவன் பரத்தமையால் பிரிந்தான். அச்செயல் அறமற்றதாகக் கருதப்பட்டது. அக வாழ்வில் மட்டுமல்லாமல் புற வாழ்வில் போரிலும் அறம் பேணியதை இலக்கியம்

காட்டுகின்றது. இவ்வாறு அறச்செயலும் ,அறமற்றச் செயலும் சங்க இலக்கியத்தில் சுட்டிக் கூறப்பட்டுள்ளதன் வாயிலாக சங்க கால மக்கள் பண்பாட்டில் அறம் மேலோங்கி இருந்தமை வெளிப்படுகிறது . சங்ககாலம் பொற்காலமாகத் திகழ அறப்பண்பு அடித்தளமாக இருந்தது என்பதை சான்றோர் யாரும் மறுத்துரையார்.

## பார்வை நூல்கள்


1. அருணாச்சலம், ப. (முதன்மைப் பதிப்பாசிரியர்)., சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், தொகுதி மூன்று, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், (2001).
2. கதிரை வேற்பிள்ளை, நா. தமிழ் மொழியகராதி, வித்தியாரத்நாகர அச்சுக்கூடம் இலங்கை, (1898).
3. சண்முகம்பிள்ளை, மு., (தொகுப்பாசிரியர்)., தமிழ் - தமிழ் அகர முதலி, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் சென்னை, (1985).
4. சுப்பிரமணியன், பா. ரா., (முதன்மை ஆசிரியர்), க்ரியாவின் தற்காலத்து தமிழ் அகராதி, தமிழ்-தமிழ்-ஆங்கிலம், சென்னை, (1997).
5. சோமசுந்தரனார், பொ.வே., ஐங்குறுநூறு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, (2009).
6. துரைசாமிப்பிள்ளை ஔவை.சு., புறநானூறு (பகுதி I, II ), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை, (2007).
7. நாராயணசாமி ஐயர், பின்னத்தூர்.அ., நற்றிணை நானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, (2007).
8. பரிமணம், அ ம. பாலசுப்பிரமணியன்., கு. வெ., (தலைமைப்பதிப்பாசிரியர்கள்) கலித்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (2007).
9. பரிமணம், அ ம., பாலசுப்பிரமணியன்., கு. வெ., (தலைமைப்பதிப்பாசிரியர்கள்) குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி)லிட்., சென்னை, (2007).
10. பரிமணம், அ ம. பாலசுப்பிரமணியன், கு. வெ. (தலைமைப்பதிப்பாசிரியர்கள்) பதிற்றுப்பத்து மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (2007).
11. பரிமணம், அ. ம, பாலசுப்பிரமணியன்., கு. வெ., (தலைமைப்பதிப்பாசிரியர்கள்) புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (2007).
12. பாலசுப்ரமணியன், கு.வெ. தொல்காப்பியம் மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (2019).
13. ராஜம், மர்ரே எஸ்., பரிபாடல், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (1981).
14. வேங்கடசாமி நாட்டார், ந.மு., வேங்கடசாமி பிள்ளை, ரா. அகநானூறு-(களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, (2009).